**மாவட்ட அமர்வு நீதிமன்றம், நாகப்பட்டினம்**

முன்னிலை: திருமதி. ஜி.எம். வசந்தி, எம்.எல்.,
முழுக் கூடுதல் பொறுப்பு மாவட்ட அமர்வு நீதிபதி, நாகப்பட்டினம்
(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)

**2026ம் ஆண்டு ஜூன் மாதம் 04ம் நாள்** - வியாழக்**கிழமை**

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் வைகாசி 21-ம் நாள்

**கு.ப.ம.எண். 241/2026**

ராஜேந்திரன், த/பெ. முருகையன் ..... மனுதாரர்/ 6 எதிரி

-எதிர்-

காவல் ஆய்வாளர், கரியாப்பட்டினம் காவல்நிலையம்,
குற்ற எண் 20/2025 ......எதிர்மனுதாரர்

இம்மனு இன்று (04.06.2026) என்முன்பாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்தரப்பு வழக்குரைஞர் செல்வி. எஸ். ஐஸ்வர்யா மற்றும் எதிர்மனுதாரர்தரப்பு சிறப்பு அரசு வழக்குரைஞர் திரு. சி. ஜெய்சங்கர் ஆகியோர் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**// உத்தரவு//**

இம்மனு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்ற எண் 20/2025-ல் சட்டப் பிரிவுகள் 191(2), 351(2), 296(b), 115(2), 324(4) BNS, தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமைகள் தடுப்புச்சட்டம் பிரிவு 4 மற்றும் 3(1)(r), 3(1)(s), 3(2)(Va) of SC/ST Act சம்மந்தமாக இந்நீதிமன்றத்தில் சரணடைந்துள்ள மனுதாரர்/குற்றம் சாட்டப்பட்டவரால் பிணை கோரி பிரிவு 483 BNSS ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து மனுதாரரை தேடிவந்த நிலையில் மனுதாரர் இந்நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார் என்றும், மனுதாரர் நிரபராதி என்றும், மனுதாரருக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், மனுதாரர் வழக்கு விசாரணைக்கு தவறாமல் ஆஜர் ஆவதற்கு உறுதியளிக்கிறார் என்றும், தகுந்த ஜாமீன்தாரர்களை முன்னிறுத்துவதற்கும் நீதிமன்ற உத்தரவுகளுக்கு கட்டுபடுவதாகவும் தெரிவிக்கிறார் என்றும், ஆகவே, மனுதாரருக்கு ஜாமீன் வழங்கி உத்தரவிடவேண்டும் என்று கோரினார்.

3. அரசுத்தரப்பு கற்றறிந்த சிறப்பு அரசு வழக்கறிஞர், ஆட்சேபனை தாக்கல் செய்து வாதுரை செய்ததுடன் வழக்கு புலன் விசாரணை முடிவுற்று, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்ற சிறப்பு அமர்வு வழக்கு எண்.14/2025 ஆக கோப்பில் எடுக்கப்பட்டுள்ளது என வாதிட்டு இம்மனுவை அனுமதிப்பதற்கு கடுமையான ஆட்சேபனை தெரிவித்தார்.

4. நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. பி. ஸ்ரீதரன் அவர்கள் மூலமாக ஆஜராகி நிகர்நிலை புகார்தாரர் ஆணையுறுதி ஆவணம் மூலமாக ஆட்சேபனையை தெரிவித்துள்ளார்.

5. மனுதாரர் தரப்பில் இம்மனுதாரர் 6வது எதிரியாக குற்ற எண் வழக்கில் காண்பிக்கப்பட்டுள்ளார் என்றும், மனுதாரர் எந்தவித குற்றச்செயலும் செய்யவில்லை என்றும், மனுதாரர் பெயர் முதல் தகவல் அறிக்கையில் காணப்படவில்லை என்றும், மனுதாரரின் பெயர் குற்றப்பத்திரிக்கையில் சேர்க்கப்பட்டு வழக்கில் சம்மன் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதன்படி மனுதாரர் ஆஜராகியுள்ளார் என்றும், ஏற்கனவே நீதிமன்றம் வழங்கிய உத்தரவுப்படி பாஸ்போர்ட் அசலை தாக்கல் செய்துள்ளார் என்றும், இவ்வழக்கில் மனுதாரர் தவறாது ஆஜராக உறுதியளித்துள்ளதாகவும், ஜாமீன்தாரர்களை ஆஜர்படுத்துவதற்கும், நீதிமன்ற உத்தரவுக்கு கட்டுப்பட தெரிவித்திருப்பதாலும், இவ்வாறான சூழ்நிலையில் நிகர்நிலை புகார்தாரர் தரப்பில் இம்மனுதாரரரை பிணையில் விட ஆட்சேபனை செய்திருந்தாலும் கூட இந்த வழக்கை பொறுத்தவரை சிறப்பு அமர்வு வழக்கு எண். 14/2025 என்று வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளதாலும் மனுதாரர் வழக்கின் விசாரணைக்கு தடையை ஏற்படுத்தாத வகையில் வழக்கு விசாரணைக்கு ஆஜராவதற்கு உறுதி அளித்திருப்பதாலும், ஜாமீன்தாரர்களை ஆஜர்படுத்துவதற்கு தயாராக இருப்பதாலும், நிகர்நிலை புகார்தாரருக்கு வழக்கு விசாரணைக்கு இடைப்பட்ட காலத்திலும் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்ற வகையில் நிபந்தனைகளை விதித்து இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்து அவ்வாறு உத்தரவிடலாம் என்று முடிவு காணப்படுகிறது.

முடிவில், இம்மனு மனுதாரருக்கு நிபந்தனையுடன் அனுமதிக்கப்பட்டு, மனுதாரரரை ஜாமீனில் விடுவிக்க உத்தரவிடப்படுகிறது. மேலும் மனுதாரர் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மதிப்பிலான பிணையப் பத்திரத்தையும், அதே தொகைக்கு இரு தனிப் பிணையாளர் (surety) பிணையத்தையும், இந்நீதிமன்றத்தின் திருப்திக்குட்பட்டு தாக்கல் செய்ய

வேண்டும். பிணைதாரர் (Surety) தனது நிழற்படத்தையும், இடது கை பெருவிரல் ரேகையையும் பிணைப் பத்திரத்தில் பதிக்க வேண்டும். மேலும், பிணைதாரரின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக, அவருடைய ஆதார் அட்டை அல்லது வங்கி சேமிப்புப் புத்தகத்தின் நகலை நீதிபதி பெற்றுக்கொள்ளலாம்.

1. மனுதாரர் விடுதலையான தேதியிலிருந்து மறு உத்தரவு வரும்வரை வாரம் தோறும் திங்கட்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் ஆஜராகி கையெழுத்திடவேண்டும்

2. வழக்கில் தொடர்புடைய புகார்தாரர் உள்ளிட்ட சாட்சியங்களை கலைக்கவோ, மிரட்டவோ, அல்லது சாட்சிகளைப் பாதிக்கக்கூடிய எவ்வித செயல்களிலும் ஈடுபடக்கூடாது.

3. மனுதாரர் விசாரணை அல்லது வழக்கின் விசாரணையின் போது தலைமறைவாகக் கூடாது.

4. ஜாமீனில் இருக்கும் காலத்தில் வேறு எந்த குற்றச் செயல்களிலும் ஈடுபடக்கூடாது.

இன்று (04,.06.2026) திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/- ஜி.எம். வசந்தி,
மாவட்ட அமர்வு நீதிபதி (முகூபொ)
(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)
நாகப்பட்டினம்.

நகல்
1. காவல் ஆய்வாளர், கரியாப்பட்டினம் காவல்நிலையம்
2. செல்வி. எஸ். ஐஸ்வர்யா, வழக்கறிஞர், நாகப்பட்டினம்.